**செய்தி வெளியீடு எண்: 273** **நாள்: 25.03.2010**

<u>தமிழ்நாடு அரசு</u>
<u>உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை</u>
<u>மாநில நுகர்வோர் சேவை மையம்</u>

<u>வங்கிகளில் கல்விக் கடன் பெறும் நுகர்வோருக்கான விழிப்புணர்வு பற்றிய</u>
<u>சிறப்பு ஆலோசனை நேரம்</u>

தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயல்பட்டு வரும் மாநில நுகர்வோர் சேவை மையத்தில் **044–28592828** என்ற தொலைபேசி வாயிலாகவும் www.consumer.tn.gov.in என்ற இணைய தள சேவை வாயிலாகவும் நுகர்வோருக்கு நேரும் ஐயப்பாடுகளுக்கு விளக்கங்கள், நுகர்வோர்கள் அளிக்கும் புகார்கள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. நுகர்வோர் அமைப்புகளின் கோரிக்கையினை ஏற்று மாநில நுகர்வோர் சேவை மையம் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை அன்று குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையைப் பெறும் முன்னர் நுகர்வோர்களுக்கு எழும் பிரச்சனைகளுக்கு ஆலோசனை மற்றும் வழிமுறைகளை அத்தொலைபேசி வாயிலாக அளித்து வருகிறது. <u>இம்மாதம் **27.03.2010** காலை **10.00** மணி முதல் மதியம் **01.00** மணி வரை நுகர்வோர் கல்விக்காக வங்கியிலிருந்து கடன் பெறும் முறை மற்றும் அதற்காக விண்ணப்பித்தல் தொடர்பான ஆலேலசனைகளை அளிக்கவும், கல்விக் கடன் பெறும் போது மனதில் கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் மாநில நுகர்வோர் சேவை மையம் முடிவு செய்துள்ளது.</u> அவ்வமயம், வங்கியில் கல்விக்கான கடன் பெறும்போது நுகர்வோர்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளுக்கான உரிய விளக்கங்களை நுகர்வோர்கள் மாநில நுகர்வோர் சேவை மையத்தின் தொலைபேசி எண். **044–28592828** மூலம் தொடர்பு கொள்ளும்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூத்த அலுவலர்களும், நுகர்வோர் அமைப்புக்களைச் சார்ந்த ஆலோசகர் மற்றும் ஒரு வழக்கறிஞரும் விளக்கங்களை வழங்குவார்கள். பொதுமக்களாகிய நுகர்வோர்கள் இம்மையத்தின் சேவையினை பயன்படுத்தி வங்கிகளில் கல்விக்கடன் பெறுவது பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**